சிலப்பதிகாரத்தின் தனித்துவம்

வா. விஜயலட்சுமி
தமிழ் உதவிபேராசிரியர்
தியாகராஜர் கல்வியியல் கல்லூரி, மதுரை
DOI: https://doi.org/10.34293/eduspectra.v5i1.07

முன்னுரை

தமிழ் நாட்டின் தொன்மை வரலாற்றினை நன்மை நீங்கா நயப்பாட்டுடன் ஒருங்குகூறும் உண்மை வழுவா உயர்நூல் ‘சிலப்பதிகாரம்’ ஒன்றேயாகும். பழந்தமிழ் நாட்டின் தெய்வ வழிபாட்டுச் சிறப்பினையும் தெய்வ நம்பிக்கையினையும் தெய்வத் தமிழின் சீர்மையினையும், மன்னர், மாந்தர் மாண்பினையும் விளைவிப்போர், கொண்டுவிற்போர், வித்தை கற்போர், புலனடக்கம் வாய்ந்த புலமையாளர், அந்தனர், சான்றார், அறிவர், இயல்புகளையும் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழின் மேன்மையினையும் தமிழ் நாட்டின் தனி வரலாற்று வாய்மைக் குறிப்புகளையும் நன்குணர்த்தும் நடுநிலைநயம் பெறும் நூல் சிலப்பதிகாரம் ஆகும்.

தமிழில் தோன்றிய முதல் இலக்கியமாகவும் ஐவகை பெருங்காப்பியங்களில் முதன்மை காப்பியமாகவும், தமிழின் முதல் காப்பியமாகவும், முத்தமிழ் காப்பியமாகவும், மூவேந்தர் காப்பியமாகவும், புரட்சி காப்பியமாகவும், நாடக காப்பியமாகவும், புதுமை காப்பியமாகவும், வரலாற்று காப்பியமாகவும், பத்தினி காப்பியமாகவும், குடிமக்கள் காப்பியமாகவும், பொதுமை காப்பியமாகவும், ஒற்றுமை காப்பியமாகவும், ஒருமைப் பாட்டு காப்பியமாகவும், தமிழ் தேசிய காப்பியமாகவும், போராட்ட காப்பியமாகவும், பைந்தமிழ் காப்பியமாகவும், அருந்தமிழ் காப்பியமாகவும், சமண காப்பியமாகவும், பாட்டுடைச் செள்யுளாகவும், சிறப்பதிகாரம் என்று உ.வே.சாவால் போற்றப் படுகின்ற காப்பியமாகவும், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று பாரதியாரால் போற்றப் படுகின்ற காப்பியமாகவும், செந்தமிழ் சுவைதோறும் சிலப்பதிகாரம் என்று கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை போற்றப்பட்ட இளங்கோவடிகளால் இயற்றபட்ட இலக்கிய ஒப்பற்ற ஓவியமாக திகழும் சிலப்பதிகாரம் எனும் காப்பியத்தில் அமைந்துள்ள தனித்துவத்தைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

இளங்கோ செய்த இலக்கிய ஓவியம்.
சாத்தனார் வேண்டுகோள்
‘‘முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது
அடிகள் நீரே அருளுக’’
சிலப்பதிகாரத்தில் அமைந்துள்ள காதைகள்
‘‘மங்கல வாழ்த்துப் பாடலும் குரவர்
மனை அறம் படுத்த காதையும் நடம் நவில்
மங்கை மாதவி அரங்கேற்று காதையும்
அந்திமாலைச் சிறப்புச் செய் காதையும்
இந்திர விழவு ஊர் எடுத்த காதையும்
கடலாடு காதையும்
மடல் அவிழ் கானல் வரியும் வேனில் வந்து இறுத்தென
மாதவி இரங்கிய காதையும் தீது உடைக் கனாத் திறம் உரைத்த காதையும் வினாத் திறத்து
நாடு காண் காதையும் காடுகாண் காதையும்
வேடுவர் வரியும் தோட்டலர் கோதையோடு
புறஞ்சேரி இறுத்த காதையும் கறங்கு இசை

ஊர்காண் காதையும் சீர் சால் நங்கை
அடைக்கலக் காதையும் கொலைக்களக் காதையும்
ஆயச்சியர் குரவையும் தீத்திறம் கேட்ட
துன்ப மாலையும் நண்பகல் நடுங்கிய
ஊர்சூழ் வரியும் சீர்சால் வேந்தனோடு
வழக்குரை காதையும் வஞ்சின மாலையும்
அழற்படு காதையும் அருந்தெய்வம் தோன்றிக்
கட்டுரை காதையும் மட்டலர் கோதையார்
குன்றக் குரவையும் என்று இவை அனைத்துடன்
காட்சி கால்கோள் நீர்ப்படை நடகல்
வாழ்த்து வரம் காதையொடு
இவ் ஆறு ஐந்தும்
உரை இடை இட்ட பாட்டுடைச் செய்யுள்''

காப்பியத்தை துவங்கும் முன் இயற்கையை வணங்குதலும், போற்றுதலும் காப்பிய மரபு என்பதை உணர்த்தும் வகையில்

''திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்!
கொங்கு அலர்த்தார்ச் சென்னி குளிர்வெண் குடை போன்று இவ்
அங்கண் உலகு அளித்தலான்
ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்!
காவிரி நாடான் திகிரி போல் பொற்கோட்டு
மேரு வலம் திரிதலான்
மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்!
நாம நீர்வேலி உலகிற்கு அவன் அளிபோல்
மேல் நின்று தான் சுரத்தலான்
பூம்புகார் போற்றுதும் பூம்பகார் போற்றுதும்!
வீங்குநீர் வேலி உலகிற்கு அவன் குலத்தொடு
ஓங்கிப் பரந் தொழுகலான்''

பூம்புகார் நகர் வளம்

''ஆங்கு பொதியில் ஆயினும் இமயம் ஆயினும்
பதிஎழு அறியாப் பழங்குடி கெழீஇய
பொது அறு சிறப்பின் புகாரே ஆயினும்
நடுக்கு இன்றி நிலை இய என்பது அல்லதை
ஒடுக்கம் கூறார் உயர்ந்தோர் உண்மையின்
முடித்த கேள்வி முழுதுணர்ந்த தோரே அதனால்
நூக நீள் நகரோடு நாகநாடு அதனோடு
போகம் நீள் புகழ் மன்னும் புகார் நகர் அது தன்னில்''

காப்பியத்தின் நாயகன், நாயகி வாழும் நகரை இந்த அளவிற்கு எந்த புலவரும் புகழ்த்தது இல்லை.

இதுவும் ஒரு சிலம்பின் தனித்துவம் ஆகும்.

அகத்தியர் வாழும் பொதிகைமலையானாலும் ஆண்டவன் எழுந்தருளியிருக்கும் இமய மலையானாலும் இம்மூதூர் மக்கள் இவ்வூரை விட்டு அங்கு போய் வாழ மாட்டார்கள். இறைவன் இருக்கும் இடத்தை விட இவ்விடம் சிறந்ததாக மக்கள் கருதுவதாக இளங்கோ கூறுகிறார். இதுவும் இந்நூலின் தனித்துவமாகும்.

மங்கல வாழ்த்து காதை

புதிதாக ஒரு செயலை செய்ய துவங்கும் போது மங்கலகரமாக தொடங்குவதே தமிழர் பண்பாடு என்பதை உணர்த்தும் வகையில் ஆசிரியர் முதலில் மங்கள வாழ்த்து காதையை வைத்துள்ளார். மங்கல நாள் மனநாளாக கோவலன் கண்ணகி திருமணத்தை வைத்துள்ளார்.

மனையறம் படுத்த காதை

மனமக்கள் மனையில் அறத்தோடு வாழவேண்டும் என்று மனையறம் படுத்தகாதை என்று பெயர் வைத்துள்ளார். திருமணம் முடிந்ததும் மனைக்குள் புகுதலே முறை என்பதை முறையாக வைத்துள்ளார்.

அரங்கேற்று காதை

தமிழர்கள் கலைகளில் சிறந்து விளங்கும் தன்மை பெற்றவர்கள் என்பதால் ஆடற்கலையை விளக்கவும் முத்தமிழான இயல், இசை, நாடகம் போன்ற வற்றின் இலக்கணத்தையும் இசைக்கருவிகளின் வகைகளையும், ஆடல் அரங்கத்தின் அமைப்பு முறைகளையும் முறையே விவரித்துள்ளார்.

அகம் புறம் என இருவகை நாட்டியத்தின் விதி முறைகளையும் விளக்கியுள்ளார்.

“என்னும் எழுத்தும் இயல்
ஐந்தும் பண் நான்கும்
பண் நின்ற கூத்து பதினொன்றும் மண்ணின் மேல்
போக்கினாள் பூம்புகார் பொன் தொடி மாதவி தன்
வாக்கினால் ஆடு அரங்கின் வந்து”

ஆடல் அரங்கேற்றம், ஆடலாசான் அமைதி, ஆடற்பயிற்சி முறைகள், அரங்கினில் ஆடும் முறைகள், அரங்கின் அமைதி, பற்றி முதன் முதலில் கூறிய நூல் சிலப்பதிகாரம் இதுவும் இந்நூலின் தனித்துவமாகும்

தனிச்சிறப்பகள்

சங்க கால சாயலும் சங்க இலக்கிய பண்பகளும் சிலப்பதிகாரத்தில் மிகுதியாக காணப்படுகிறது. சிலம்பில் காணப்படும் அகப்புற கூறுகள் முல்லை (ஆயச்சியர் குரவை) குறிஞ்சி (குன்றக் குரவை) மருதம் (நாடுகாண் காதை) நெய்தல் (கானல்வரி) பாலை (வேட்டுவவரி) என ஐந்து நிலப்பாங்கும் மக்கள் வாழ்வு முறையும் பற்றிய பகுதிகள் பல காணப்படுகின்றன. கானல்வரியும் குன்றக்குரவையும் போல்வன உணர்த்தும் அகத்திணைக் கூற்று முறைகளும் காணப்படுகின்றன. புறத்திணை வளர்ச்சியையும் சிலம்பில் நாம் காணலாம். ‘காட்சி கால் கோள் நீர்ப்படை நடுகல், சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல்’ என ஆறு துறைகளைத் தொல்காப்பியர் சுட்டுகிறார். இவற்றையே காட்சிக்காதை, காட் கோட்காதை, நீர்ப்படைக் காதை, நடுகற்காதை, வாழ்த்துக்காதை, வரந்தரு காதை எனச் சிலம்பு காதைகளாக வகுத்துரைக்கிறது.

சிலம்பு திருக்குறள் வழியையும் பின்பற்றுகிறது என்பதற்கு பல சான்றுகள் உள்ளது.

“பிறர்க் கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும் (319) என்ற குறட்பா கருத்தே,

“முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் காண்குறூஉம் பெற்றிய காண்” என கண்ணகி வாயிலாக வெளிப்படுகிறது.

இங்ஙனம் தொகைப் பாடல்களோடு ஒற்றுமைப் படினும் அவற்றில் வேறுபட்டு நின்று அக்காலக் கலைகளையும் மக்கட் பழக்க வழக்கங்களையும் உணர்த்துமிடங்கள் பலவாகும். மரபு தழுவிய அகப்புறப் பாடல்களுக்கும் கதை தழுவிய சிலம்பிற்கும் இங்ஙனம் வேறுபட்டிருப்பது இயற்கையேயன்றோ?

சிலப்பதிகாரம் தமிழர்களின் ‘இசையிலக்கணம்’ உணர்த்தும் நூலென்று பாராட்டப்படுகிறது. மங்கல வாழ்த்துப் பாடல், அரங்கேற்று காதை, கானல்வரி, வேனிற்காதை, வேட்டுவரி, ஆயச்சியர் குரவை, துன்டமாலை, ஊர்சூழ்வரி, வஞ்சின மாலை, குன்றக் குரவை, வாழ்த்துக்காதை ஆகியன அக்காலத்து இசைக்கலை பற்றியும், இசைப்பாடல் அமைதி பற்றியும், ஆடல் வகை பற்றியும் உணர்த்தும் செய்திகள் பலவாகும். மாதவி தன் நாட்டியக் கலையை நாட்டிய ஆசிரியனிடம் மட்டும் பயில வில்லை. அவ்வாசிரியனுடன் இசை, தமிழ், தண்ணுமை, குழல், யாழ் ஆசிரியர்களும் அவளுக்குப் பயிற்சி தந்தனர். என்பது அவள் அரங்கேறிய காலை உணர்த்துகிறது.

“ குழல்வரி நின்றது யாழே: யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே: தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே: முழவோடு
கூடிநின் றிசைத்தது ஆமந்திரிகை.”

இசையில் வல்லவன்

“யாழும் குழலும் சீரும் மிடறும்
தாழ் குரல் தண்ணுமை ஆடலோடு இவற்றின்
இசைத்த பாடல் இசையுடன் படுத்து
வரிக்கும் ஆடற்கும் உரிப்பொருள் இயக்கித்
தேசிகத் திருவின் ஓசை எல்லாம்
ஆசின்று உணர்ந்த அறிவினன் ஆகி
கவியது குறிப்பும் ஆடல் தொகுதியும்
பகுதிப்பாடலும் கொளுத்தும் காலை
வசை அறு கேள்வி வகுத்தனன் விரிக்கும்
அசையா மரபின் இசையோன் தானும்”

இவ்வளவு பின்னணி இசையுடன் நாட்டிய நன்னூலை நன்கு கடைப்பிடித்து மாதவி ஆடினாளாம்.

சிலம்பு கூறும் நாட்டிய அரங்கு அமைப்பு, எழினி அமைப்பு, விளக்கு ஒளி அமைப்பு அனைய செய்திகள் சிறப்பானவை. கடலாடு காதையில் பதினொரு வகை ஆடல்கள் சுட்டப்படுகின்றன.

- அல்லியம்
- கொடுகொட்டி
- குடை
- குடம்
- பாண்டரங்கம்
- மல்
- துடி
- கடையம்
- பேடு
- மரக்கால்
- பரவை

மாதவி இவற்றை எங்ஙனம் ஆடினால் என்பதை இப்பாடல் மூலம் அறியலாம்.

“அவரவர் அணியுடன் அவரவர் கொள்கையின்
நிலையும் படிதமும் நீங்கா மரபின்
பதினோர் ஆடலும் பாடடின் பகுதியும்

விதிமாண் கொள்கையின் விளங்கக் கானாய்''
என்ற விஞ்சையன் தன் காதலிக்குக்காட்டி மகிழ்கின்றான் எண்வகை வரிக்கூத்தையும் அது விளக்குகிறது.

சிலப்பதிகாரம் நாட்டுப்புறப் பாடல்களாகிய வாய்மொழி இலக்கியத்தைப் பெரிதும் போற்றி நம் நெஞ்சையள்ளும் வகையில் வெளிப்படுத்தகிறது. வேட்டுவவரி, கானல்வரி, ஆற்றுவரி, ஊசல்வரி, கந்துவரி, அம்மானைவரி, என வருவன நாட்டுப்புறப் பாடல்களின் இலக்கிய வடிவங்களே.

''திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோல் அதுஒச்சி
கங்கை தன்னைப் புணந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாதொழிதல் கயற் கண்ணாய்
மங்கை மாதர் பெருங் கற்பென்று
அறிந்தேன் வாழி காவேரி''.

என்னும் கோவலன் ஆற்றுவரிப் பாடலில் அடி மடக்கி வந்து அதன் வாய்மொழிப் பண்பைப் காட்டுகிறது.

''பொன்னிலங்கு பூங்கொடி! பொலஞ்செய் கோதை வில்லிட
மின்னிலங்கு மேகலைகள் ஆர்ப்ப ஆர்ப்ப எங்கணும்
தென்னன் வாழ்க வாழ்க என்று சென்று பந்தடித்துமே
தேவர் ஆர மார்பன் வாழ்க என்று பந்தடித்துமே''

இக் கந்துவரிப் பாடலில் பந்தடிக்கும் ஓசை மிளிரக் காணலாம். நாட்டுப்புறப் பாடல்களில் தம் உள்ளத்தை பறிக்கொடுத்தவர் இளங்கோவடிகள் என்பதற்கு ஒரு சான்று நாடுகாண் காதையில் இடம் பெறுகிறது. காவிரியாற்றங்கரையில் உழவர்கள் ஆரவாரத்தைக் கேளுங்கள்.

''கருங்கை விளைஞரும் களமரும் கூடி
ஒருங்குநின் றார்க்கும் ஒலியே அன்றியும்
செங்கயல் நெடுங்கண் சில்மொழிக் கடைசியர்
வெங்கள் தொலைச்சிய விருந்தின் பாணியும்
பார் உடைப்பனர் போல் பழிச்சினர் கைதொழ
ஏரோடு நின்றோர் ஏர் மங்கலமும்
அரிந்துகால் குவித்தோர் அரிகடாவுறுத்த
பெருஞ்செய்த் நெல்லின் முகவைப் பாட்டும்
தெண்கிணைப் பொருநர் செருக்குடன் எடுத்த
மண்கனை முழவின் மகிழிசை ஓசையும்''

ஆகியவற்றைக் காவிரியாற்றங்கரையிலே கேட்டுக்கொண்டே சென்றதனால் தான் ஆர்வ நெஞ்சமோடு அவலங் கொன்னாராய்ச் சென்றனராம். இங்ஙனம் குறிப்பிடும் இளங்கோவடிகள் பேரவலம் நிறைந்த கதை என்பதனால் போலும் இத்தனை நாட்டுப்புறப் பாடல்களுக்கு இலக்கிய வடிவம் தந்து இடையிடையேமிடந்து தந்துள்ளார்.

தமிழிலக்கிய உலகில் நாட்டுப்பறப் பாடல்களுக்கு மிகச்சிறந்த இலக்கிய வடிவங்களைத் தந்து நம் உள்ளங் கவர்ந்தவர்கள் இளங்கோவடிகள், மாணிக்கவாசகர், தாயுமானவர், வள்ளலார், பாரதியார் ஆவர். குயில் பாட்டில் பாரதியார் இவ்வார்வத்தை வெளியிடும் இடம் ஒன்றுண்டு.

“மானுடப் பெண்கள் வளருமொரு காதலினால்
ஊனுருகப் பாடுவதில் ஊறிடுந்தேன் வாரியிலும்
ஏற்றநீர்ப் பாட்டின் இசையினிலும் நெல்லிடிக்கும்
கோற்றாடியார் குக்குவெனக் கொஞ்சம் ஒலியினிலும்
கண்ண மிடிப்பார்தம் சுவை மிகுந்த பண்களிலும்
பண்ணைமடவார் பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி இசைத்திடுமோர் கூட்டமிதப் பாட்டினிலும்
வேயின் குழலோடு வீணைமுதலா மனிதர்
வாயினிலும் கையாலும் வாசிக்கும் பல்கருவி
நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நன்றெலிக்கும்
பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்
நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணி ஆரம்”

என்று பாரதியார் குறிப்பிடுவதன் உண்மை இதனாற் புலனாகும்.

தொன்மைக் காலத்து நாடகப்பண்பகள் கூத்து வகைகளிலிருந்து கிளைத்தவை. ஒருவரே கதை கூறி நடித்துக் காட்டுவன: ஒரு சிலர் உரையாடியும் ஆடியும் பாடியும் உணர்த்துவன: பாத்திரங்களாக வேடமிட்டு வந்து போவன: இடையிடையே ஆசிரியனே வந்து கதை கூறுவன என இவ்வாறமைந்த திறம் பலவும் சிலம்பில் உண்டு.

நாடக அங்கதம் என்பதும் மேலைநாட்டு நாடகவுத்தி: அவல நாடகங்களுக்கு அது மிக இன்றியமையாதது. சிலம்பின் தொடக்கத்திலே ‘காதலற் பிரியாமல் கவவுக்கைஞெகிழாமல் தீதறுக’ என்று பெண்கள் கூடி, ஆடிப்பாடி வாழ்த்தும் போது, ஏனிந்த மங்கலமற்ற சொற்கள் என நம் நெஞ்சம் துணுக்குகிறது. முன்னுணர்த்துதல் என்பது நாடகவுத்தியே. கோவலன் கண்ணகி இருவரும் மதுரைக்குள் புகும்போதே கருங்நெடுங்குவளையும் ஆம்பலும் கமலமும் கண்ணீர் சிந்திக்காலுற நடுங்குகின்றன! பேருடிந்து எடுத்த ஆரெயில் நெடுங்கொடி வாரல் என்பது போல மறித்துக் கை காட்டுகிறது. கண்ணகி கருங்கணும், மாதவி செங்கணும் நீருகுத்து எண்ணுமுறை இடத்தினும் வலத்தினு துடிக்கும் போது வரப்போவது என்னவோ என்று நம் நெஞ்சில் ஆர்வநிலை எழுகிறது. அடைக்கலக் காதையில் மாடலன் கோவலனின் இளமைக்கால நிகழ்ச்சிகளை நினைவு கூர்கின்றான்.

இது பின்னோக்கு உத்தியின்பாற்படும். இன்பமும், துன்பமும் கலந்து வருவதும், நகையும் அவலமும் மாறி மாறி வருவதுமான முரண்சுவையே சிறந்த நாடகக்கூறு. அவலத்தில் முடியும் சிலம்பு மங்கல வாழ்த்தாகத் திருமண மகிழ்ச்சியில் தொடங்குகிறது. அடைக்கலக் காதைக்கு அடுத்துக் காடு காண் காதை என இவற்றை எண்ணிப் பார்த்தால் உண்மை விளங்கும்.

அந்திமாலைச் சிறப்புச்செய் காதையில் மாலையும், காலையும் கூடுவோரும் பிரிந்தோரும், மகிழ்ச்சியும், அழுகையும் மாதவியும், கண்ணகியும் என அதில் அமைந்தள்ள முரண் அமைபாங்குகள் எண்ணியெண்ணி மகிழ்தற்குரியனவாகும். நாடகப் பண்புகளின் கலஞ்சியமே சிலம்பு எனலாம்.

இங்ஙனம் எண்ணிப்பார்த்தால் சிலம்பின் ஒவ்வொரு சிறப்பும் நம்மை ஒவ்வொரு வகையாகச் சிந்திக்க வைக்கும். அதில் மூன்று நாடுகளாக திகழ்ந்த தமிழக நிலப்பரப்பைக் காணலாம். மூன்று தலைநகரங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளலாம்., மூவேந்தர்களின் பெருமையை உணரலாம். மூன்று நாட்டின் நாட்டிலும் வாழ்ந்த சமுதாய மக்களைப் பற்றிக் கோடிட்டு அறிந்து கொள்ளலாம்.

தமிழரின் தேசியக் காப்பியம், வரலாற்றுக் காப்பியம், சமுதாயக் காப்பியம் என்ற பெயர்கள் பலவும் அதற்கு பொருந்தி வருவனவாகும். சங்க கால நெடும் பாடல்களாகிய பத்துப்பாட்டின் சாயலை நாம் சிலம்பில் காண்கிறோம். தலைவன் தலைவி வருணனை, நில வருணனை, ஆற்று வருணனை, பாடினி வருணனை, என்பனவெல்லாம் மரபு வழி வந்த பண்புகளாகும். எயினர்களை ஆறலை கள்வராக மட்டும் காட்டவே அகப்பாடல் இடம் தந்தது. அவர்களின் கொற்றவை வழி பாட்டைக் காட்டச் சிலம்பில் வாய்ப்பேற்பட்டது. ஆயர்களின் ஆனிரை மேய்த்தலைச் சுட்டவே அகப்பாடலில் மரபு இடம் தந்தது. கலித்தொகை மட்டும் அவர்களின் ஏறுதழுவுதலையும் உணர்த்த முற்பட்டது.

சிலம்பிலோ அவர்களின் அன்றாட வாழ்க்கை முறை, வழிபாடுகளைக் காட்டுகின்றன. பெரும்பாணாற்றுப் படையில் வரும் ஆயர் முதுமகள் பற்றிய செய்திகளை மாதிரியுடன் ஒப்பிட்டுக் காணலாம். பிற்காலத் தமிழ் காப்பியங்கள் சொல் வளமும் இலக்கியப் பலவளமும் வாய்த்துத் திகழ்வதற்கு இது முன்னோடியாக முதற்காப்பியமாக அடித்தளம் அமைத்தது.

சிலப்பதிகாரத்தில் அமைந்துள்ள புதுமைகள்

இளங்கோடிவகளுக்கு முற்பட்ட புலவர்கள் கையாளாத புதிய செய்யுள் வகைகளை அவர் கையாண்டு பல்வேறு உணர்ச்சிகளைப் புலப்படுத்தியிருக்கிறார். புதிய பலவகைச் செய்யுள் வடிவங்களை காணலாம். கடற்கரையில் பாடும் இசைப்பாடல்களைக் கொண்டே கானல் வரியிலும் ஆய்ச்சியர் குரவை முதலியவற்றிலும் இளங்கோ அந்த அந்த பகுதியில் வழங்கிய நாட்டுப் பாடல்களாக அவற்றை அமைத்துள்ளார். அக்காலத்து நாட்டுப் பாடல்களிலிருந்தே அவர் அந்தப் புதிய செய்யுள் வடிவங்களை வடித்து தந்துள்ளார் என்பதில் ஐயம் இல்லை. இவ்வகையில் தமிழிலக்கியத்திற்கு அவர் செய்துள்ள தொண்டு ஒப்பற்றதாகும்.

உலகப் பழைய காப்பியங்கள் அரச குடும்பத்தாரையோ, தலைவர்களாக கொண்டிருக்கும். இளங்கோ தன் காப்பியத்தின் தலைவனாக ஓர் அரசனையும், அரசியையும் அமைக்காமல் வணிகக் குடும்பத்தில் பிறந்த ஒருவனை தலைவனாகவும் வணிகக் குடும்பத்தில் பிறந்த ஒரு பெண்ணை காப்பியத்தின் தலைவியாகவும் தேர்ந்தெடுத்திருப்பது புதுமையேயாகும்.

அவள் காலில் அணிந்த சிலம்பே காப்பியத்திற்கு பெயராக வைத்துள்ளார். முதல் தமிழ்க் காப்பியத்தை இவ்வாறு அமைத்த காரணத்தால் குடிமக்களுள் ஒருவனாயினும் ஒரு காப்பியத்திற்கு தலைவனாகவும், தலைவியாகவும் அமைய முடியும் என்ற துணிவை ஏற்படுத்தியுள்ளார். இளங்கோவடிகள் செய்த மற்றொரு புதுமை என்னவென்றால் சமுதாயத்திலும் பல நூல்களிலும் வழக்கமாக கணிகையை பழித்து கூறுவார்கள். ஆனால் இளங்கோ கணிகையாகிய மாதவியை கண்ணகிக்கு அடுத்த நிலையில் வைத்து போற்றியுள்ளார். கோவலன் ஒரு இடத்தில் மாதவியை பழித்த போதிலும் அடுத்த நிலையிலேயே "தன் தீது இவள்" என்று அவளைக் குற்றமற்றவளாகக் கூறுகிறார். விளைமகளிர் குடும்பத்தில் பிறந்த ஒருத்தி தன் குலத்தொழிலைப பழித்து ஒதுக்கிய துணிவைப் பதினெட்டாம் நூற்றாண்டு முன் முதன் முதலில் இந்தக் காப்பியத்தில் காண்கிறோம்.

பொதுவாக சைன சமயத் துறவிகள் இல்லறத்தைப் புகழ்ந்து பேசுவதில்லை பெண்களை உயர்த்திக் கூறுவதும் இல்லை. இளங்கோவடிகள் இவ்வகையிலும் புதுமையை புகுத்தியுள்ளார். இல்லறத்தைப் புகழ்ந்து கண்ணகியின் கற்பு வாழ்வை உயர்த்திக் கூறியுள்ளார்.

காப்பியம் அல்லது நாடகம் சுவையாக அமைய வேண்டும் என்றால் வில்லனாக ஒருவனை காண்பிக்க வேண்டும். நல்லவர் படும் துன்பங்களுக்கெல்லாம் காரணமாக இருப்பவர்

இந்த பொல்லாதவர் என்று காட்டப்பட வேண்டும். சிலப்பதிகாரத்தில் கோவலனும் கண்ணகியும் பட்ட துன்பங்களுக்குக் காரணமாகக் கொடியவன் ஒருவனை காட்ட இளங்கோவுக்கு மனம் வரவில்லை. பொற்கொல்லன் ஒருவனை மதுரையில் காட்டி அவனை இரண்டொரு தொடர்களில் சுட்டிக் காட்டியுள்ளார்.

சிலப்பதிகாரத்தில் உள்ள முப்பது காதைகளில் ஒரே ஒரு காதையில் மட்டும் பொற்கொல்லனை அமைக்கிறார். அந்தப் பகுதியிலும் இறுதியில் கோவலனின் கொலைக்குக் காரணம் பொற்கொல்லன் அல்ல ஊழ்வினையே காரணம் என காப்பியத்தை முடிக்கிறார். கொலைத் தண்டனை தந்து கோவலனுடைய வாழ்வை முடித்த பாண்டிய அரசன் மேல் கொடுமை கூற லாம் என்றால் அவனுடைய குற்றத்தையும் காப்பிய ஆசிரியர் போக்கிவிடுகிறார். கொடுமைக்கு ஆளான கண்ணகியின் வாயாலேயே அவன் தீமை இல்லாதவன் என்று கூறுமாறு செய்துவிடுகிறார். ஆகவே காப்பியத்தில் கொடியவன் இல்லாதது போல் காட்டுகிறார் இவ்வாறு கொடியவனே இல்லாமலும் சுவையான காப்பியத்தை படைக்க முடியும் என்பதை நிருபித்து புதுமை படைத்துள்ளார்.

காப்பிய சிறப்பு ஒரு மனிதனது வாழ்க்கையை முழுமையாகப் பார்த்து உயர்ந்த உண்மைகளைக் காட்டி மனித சமுதாயத்தை வழி நடத்திச் செல்லும் இணையற்ற ஒப்பற்ற பெருங்காப்பியமாகும். சிலப்பதிகாரம் தோன்றுவதற்கு முன்பிருந்த தமிழ் இலக்கியங்கள் யாவும் அகத்திணை புறத்திணை பாடல்களாகவே இருந்தன. அவை தனி மனித உணர்ச்சிகளைப் பொதுமையில் நின்று உணர்த்துகின்றன. ஆனால் ஒருவரது வாழ்க்கையை முழுமையாகப் பார்த்து உயர்ந்த உண்மைகளைக் காட்டி மனித சமுதாயத்தை வழி நடத்திச் செல்லும் முதல் காப்பியம் இதுவாகும்.

காப்பிய பெருமை

சிலப்பதிகாரக் காலத்தில் வழக்கிலிருந்த தமிழர்களின் பண்பாடு, நாகரீகம், சமய நெறிகள், பழக்க வழக்கங்கள், கலைகள் ஆகியவற்றை தெரிந்துக்கொள்ள சிலம்பு அறிய நூலாக பயன்படும் என்பதில் ஐயம் இல்லை.

இக்காப்பியம் கண்ணகி, கோவலனின் கதையை கூறும் படைப்பாக மட்டும் அல்லாமல் தமிழர்களின் கலை இலக்கியத்தை வெளிப்படுத்தும் நூலாகவும் விளங்குகிறது. திருக்குறளுக்கு அடுத்தப்படியாக அதிகமாக மொழி பெயர்க்கப் பட்ட நூலாகும். பாடல் வடிவில் இவ்விலக்கியம் எழுதப்பட்டுள்ளது. பண்டைய நாகரீகம், பண்டைய வாழ்வியல் நெறி முறைகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்லும் நூலாக உள்ளது.

இறையனார் களவியல் உரையார், இளம்பூரணர் போன்ற உரையாசிரிகளால் மேற்கோளாக எடுத்தாளப்பட்ட பெருமையுடைய நூல் சிலம்பாகும். தமிழறிஞர்கள் மிகுதியாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட நூல் இதுவே ஆகும்.

சிலப்பதிகாரத்தின் கதை மாந்தர்களான கண்ணகி களங்கமற்ற பெண்ணொழுக்கத்தின் எடுத்துக்காட்டாகவும் கற்பு நெறியின் அளவு கோலாகவும் இளங்கோ படைக்கப்பட்டிருக்கார்.

“ தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்

பெய்யெனப் பெய்யும் மழை”

மாதவி ஆடற்கலையின் ஆனிவேராகவும் ஆடற்கலையின் ஆழம் உணர்ந்தவளாகவும் திகழ்ந்தாள். கணிகையர் குலத்தில் தோன்றினாலும் கற்புநெறி வழுவாமல் கோவலனுக்கென்றே வாழ்ந்தவள்.

முடிவுரை

இனிய இசைப்பாடல்கள் பலவற்றையும் தன்னகத்தே கொண்டே ஒரு தனிப்பெரும் படைப்பு சிலம்பாகும். நாயன்மார்கள், ஆழ்வார்கள் பாடிய பக்திப்பாடல்களுக்கு முன்னோடியாக இசை சுவையும், கவிதை சுவையும் ஆடற் சிறப்பு வாய்ந்த நூலாகும். சிலப்பதிகாரம்

அறத்திணை மக்களுக்கு உணர்த்தும் ஒரு சிறந்த நூலாகும். அரசியல் பிழைத்தோர்க்கு அறமே எமனாக மாறும் என்பதையும் பெருமை மிக்க பத்தினியை பெரியோர் போற்றுவர் என்பதையும் ஊழ்வினை தொடர்ந்து வரும் என்ற உண்மையையும் இந்நூல் விளக்குககிறது. இத்தகைய அறநெறிக்கருத்துகளை வாழ்வில் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்கவேண்டும்.

துணை நூல்கள்

1. மு.வ. இலக்கியவரலாறு
2. தமிழண்ணன். இலக்கியவரலாறு
3. பொ. வே. சோமசுந்தரனார் கழகப் பதிப்பு
4. பாக்கிய மேரி. தமிழ் இலக்கிய வரலாறு